வலிகாமம் வடக்கு பிரதேசசபை

யாழ்ப்பாண மாவட்டம்

----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 23 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வலிகாமம் வடக்கு பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் செலவினங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | வருமானங்கள் | | செலவினங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிகை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிகை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | | 02 | 1,058,718 | | - | - | - |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 01 | 2,750,496 | 01 | 30,000 | 04 | 375,081 |
| வகைப்படுத்தல் வழு | 01 | 21,702 | - | - | | | | |

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-----------------------------------------------------------

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

--------------------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 19இ083இ300 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 17,554,756 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 17,631,200 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---------------------------

i. பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 266இ812 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 6,614,448 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

ii. சபையானது வருடாந்த செயற்திட்டம் சரியான முறையில் தயாரித்து நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமையால் வங்கி நடைமுறை கணக்குகளில் காசேட்டின்படி வங்கி மீதி ரூபா 50,002,265 காணப்படுகின்றது.

2.3 வருமான நிர்வாகம்

-------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

--------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 71 | 123 | 517 |
| குத்தகை வாடகைகள் | 884 | 2,232 | 14 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 470 | 652 | - |
| வேறு வருமானங்கள் | 50,111 | 48,262 | 27,276 |

2.3.2 வருமான பாதிப்பு

1999ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் மின்சார சபையிடம் கையளிக்கப்பட்ட போதும் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட வீதி மின் விளக்குகள் பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையிடம் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபை நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 583,130 பெறுமதியான செலவினத்துக்கு மீளளிப்பு கிடைக்காமையால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.3 வருமான நிலுவை

மீளாய்வாண்டில் ரூபா 530இ752 பெறுமதியான வீதி வரி மற்றும் வாடகை என்பன அறவீடு செய்யப்படாத நிலுவை வருமானமாக காணப்படுகின்றது. இவற்றை அறவிட ஆக்கபூர்வமானன எந்தவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம்

----------------------------------------

சபையினால் மீளாய்வாண்டில் வருமதியான நீதிமன்றத் தண்டப்பணங்களும் ரூபா 1,752,850 அறவிட வேண்டியுள்ள போதிலும் வருமதியாகவோ வருமானமாகவோ கணக்குகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.

2.3.5 முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள்

---------------------------------------------------------

i. மீளாய்வாண்டிற்கான முத்திரைத் தீர்வைக் கட்டண விபரப் பட்டியல் காணிப் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்படாத போதிலும் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு தொகையாகிய ரூபா 10,000,000 முத்திரை தீர்வைக் கட்டண வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டது. ஆயினும் அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2006 – 2010ம் ஆண்டு காலப் பகுதிக்குரிய வருமதி முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 15,843,286 கடந்த காலங்களில் வருமானமாக கணக்கீட்டு நடவடிக்கைக்காக உட்படுத்தப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதி வரையும் அறவீடு செய்யப் பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

2.4.1 மெய்மையாய்வு செய்யப்படாத செலவுகள்

கணிப்பீட்டுச்சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாத 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 33,174,858 ஆகக் காணப்படுகின்றது.

விபரம் வருமாறு:

| விபரம் | தொகை<br>ரூபா |
|---|---|
| நிலையான சொத்துக்கள் | 32,899,632 |
| களஞ்சிய பொருட்கள் | 275,226 |
| | 33,174,858 |

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1987ம் ஆண்டின் பிரதேசசபை சட்டம் | |
| அத்தியாயம் ஏ பிரிவு 158(1) | ஆதனவரி நிலுவை ரூபா 517,032 காணப்படுகின்றபோதும் செயலாளர் நிலுவை செலுத்தத் தவறியோருக்கு ஆணைச்சீட்டு எழுதப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேசசபை நிதி நிர்வாக ஒழுங்குவிதி | . |
| அத்தியாயம் ஐஐஐ பிரிவு 70 | நிலுவை வாடகை ரூபா 13,750 தொடர்பில் அனுமதிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின்னர் அரசிறை எழுதுனர் தவறுனர் நிரல் தயாரித்து செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 6,824,327 முற்பணங்கள் செலுத்தத் தவறும்போது செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் 06 பிரிவு 05 நிதி ஒழுங்கு விதி உபபிரிவு 237 | மாற்றப்படாத 05 காசோலைகள் ரூபா 10,635 பெறுமதியானவை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதி ஒழுங்கு விதி<br>நிதி ஒழுங்கு விதி 571 | காலங் கடந்த ஒப்பந்தகாரர் மற்றும் நானாவித வைப்புக்கள் ரூபா 170,135 நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| வைப்புக்களின் விபரம் | வருடம் 2010 | 5 வருடத்திற்கு மேற்பட்டவை |
|---|---|---|
| ஒப்பந்தகாரர் வைப்பு | 98,515 | - |
| நானாவித வைப்பு | 56,629 | 14,991 |
| | 155,144 | 14,991 |

| | |
|---|---|
| 2002ஆம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டம் | 2010ம் ஆண்டில் அறவிடப்பட்ட ரூபா 27,429 பெறுமதியான பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப் பட்டிருக்கவில்லை |
| 1982 ம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதிச்சட்டம் இல.03 பிரிவு 27 | இதன் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பானது அதனை தொடர்ந்து வரும் மாதம் பணிப்பாளர் ஊழியர்-சேம-லாப நிதியத்திற்கு செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும் சபையானது கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 14,991 பங்களிப்பினை செலுத்தாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப் பட்டுள்ளது. |

2.6 பயன்பாடற்ற செலவினம்

---------------------------------------

தேசத்தின் மகுடம் மற்றும் மாநகரசபையின் நகர மைதானத்தில் நடைபெற்ற கண்காட்சிக்காக சபையின் நோக்கம் குறிக்கோள் மற்றும் செயற்பாடு அல்லாத விடயமாகிய கீரிமலை புனிதபூமியின் மாதிரி காட்சிப்படுத்திய செலவினமாக ரூபா 62,200 செலுத்தப்பட்டிருப்பது பயன்பாடற்ற செலவினமாக அவதானிக்கப் பட்டுள்ளது.

2.7 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------

2.7.1 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதில் காலதாமதம்

--------------------------------------------------------------------------------

வருடாந்த செயற்திட்டம் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு, செயற்திட்டங்கள் செயற்படுத்தாமையால் நடைமுறையாண்டில் செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் காலதாமதம் காரணமாக எதிர்வரும் காலங்களில் கொடுப்பனவு மேற்கொள்ளவென ரூபா 8,418,397 சில்லறை கடனாளிகள் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு:

| <u>செயற்திட்ட விபரம்</u> | <u>ஒதுக்கப்பட்ட தொகை ரூபா</u> |
|---|---|
| பெரிய கிணற்றடி கணக்கர் வீதி | 465,038 |
| மல்லாகம் சந்தை கதவு வேலை | 58,875 |
| சோடாக் கொம்பனி கணக்கர் வீதி வேலை | 5,280,496 |
| கொங்கிறீற் வீதி அமைப்பு | 443,234 |

| | |
|---|---|
| பொது நோக்கு மண்டப அமைப்பு | 247,100 |
| பிலிசறு முகாமை நிலையம் எல்லைச்சுவர் அமைப்பு | 1,787,156 |
| கொங்கிறீற் வீதி அமைப்பு | 136,498 |
| | 8,418,397 |

2.8 செயற்பாடுகளில் செயற்திறனின்மை

2010ம் ஆண்டில் உள்;ராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்ட எட்டு சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைகள் ரூபா 32,000 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.9 திண்மக் கழிவு முகாமைத்துவம்

திண்மக் கழிவுகளை இடுவதற்காக எல்லைச்சுவர் அமைப்பதற்கான செலவினம் ரூபா 235,195 வேலை நிறைவேற்றப்படாது தொடர்ந்தும் செலுத்த வேண்டிய கொடுப்பனவாக சில்லறைக் கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் 3ம் பிரிவின் பிரகாரம் அப்பிரதேச மக்களின் வசதிகளை பாதுகாப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கத்தவறியமையை சுட்டிக் காட்டுகிறது

2.10 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

பின்வரும் முறைகைள், கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. மாதாந்த கூட்டத் தீர்மானப் பிரதி
iv. கணக்கீடு
v. மனிதவள முகாமைத்துவம்
vi. நன்கொடை
vii. வாகனங்களின் பயன்பாடு
viii. வரவு செலவுத்திட்ட கட்டுபாடு.